**ஓய்வூதியச் சுற்று நிருப இலக்கம்: 08/2014**

எனது இலக்கம்: ஓய்வூ/சுற்றுநிருபம்/2014
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
04-07-2014.

அனைத்து மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்களிற்கு,

**ஓய்வு பெற்ற சிரேட்ட பிரசைகளின் பாதுகாப்பிற்காக வேண்டி "புஹுமன்" காப்புறுதித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.**

அரச சேவையில் ஈடுபட்டதன் பின்னர் ஓய்வு பெற்றுச் செல்லும் ஓய்வூதியர் சமூகத்தினது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக ஓய்வூதியத் திணைக்களத்துடன் இணைந்து ஏஷியன் எலாயன்ஸ் காப்புறுதி நிறுவனம் **"புஹுமன்"** எனும் பெயரில் "சிரேட்ட பிரசைகளின் பாதுகாப்பிற்கான" காப்புறுதித் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. அரச சேவை ஓய்வூதியர்களுக்காக வேண்டி விசேடமாக அறிமுகப்படுத்தப்படுகின்ற இக் காப்புறுதி முறையின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள திட்டங்களினால், விபத்துக்கள் மூலம் இடம் பெறும் உயிரிழப்புக்கள் மற்றும் உபாதைகளுக்கான காப்பீடுகள், இறுதிக் கிரியைகள் மற்றும் காயங்களுக்கான நிதியியல் அனுகூலங்கள் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகையிலான செலவீனங்களை மீளளித்தல் என்பனவற்றின் மூலம் காப்புறுதியாளரின் மற்றும் தங்கி வாழ்வோரின் பொருளியல் மற்றும் சமூகவியல் மேம்பாட்டினை உறுதிப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்காப்புறுதி முறையினை நடைமுறைப்படுத்துகையில் கீழ் குறிப்பிடப்படும் வண்ணம் பிரதேச செயலகங்களினால் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

01. காப்புறுத் திட்டத்தில் இணைய விருப்பினைத் தெரிவிக்கும் ஓய்வூதியர்களுக்காக வேண்டி ஓய்வூதியத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்படும் PI-1 மாதிரிப்படிவத்தினை இரு பிரதிகளில் கொண்டு ஓய்வூதியப் பிரிவின் அதிகாரிகள் மூலம் முறையாகப் பூரணப்படுத்துதலும், அதன் ஒரு பிரதியினை காப்புறுதி நிறுவனத்திடத்தே அனுப்புதல் மற்றும் அடுத்த பிரதியினை ஓய்வூதியக் கோவையினுள் உள்ளடக்குதல்.

02. காப்புறுதித் திட்டத்தில் இணைவதற்கு விருப்பினைத் தெரிவிக்கும் ஓய்வூதியர்கள் செழுத்த வேண்டிய முதல் மாதக் காப்புறுதித் தவணையினை மற்றும் காப்புறுதிப் பத்திரத்தின் காலப் பகுதியினுள் செழுத்த வேண்டிய மாதாந்தத் தவணைகளை ஓய்வூதியத்திலிருந்து அறவிடுதல் மற்றும் தரவுத் தொகுதியினுள் (Data Base) உள்ளடக்குதல்.

03. காப்புறுதி நிறுவனத்தினால் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் வழங்கப்படும் காப்புறுதிப் பத்திரம், நிறுவனத்திடமிருந்து கிடைக்கப் பெற்றதன் பின்னர் ஓய்வூதியரிடத்தே அது பற்றி அறிவித்தல் மற்றும் அதன் பிரதியொன்றினை ஓய்வூதியக் கோவையினுள் உள்ளடக்குதல்.

04. ஒவ்வொரு பிரதேச செயலகத்தினாலும், காப்புறுதி நிறுவனத்தினால் காப்புறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள அனைத்து ஓய்வூதியர்களிடமிருந்தும் மாதாந்தம் அறவிடப்படும் காப்புறுதித் தவணைகளின் முழுப் பெறுமானத்தினைக் காசோலையொன்றின் மூலம் ஏஷியன் எலாயன்ஸ் காப்புறுதி நிறுவனத்திடத்தே அனுப்புதல்.

05. ஓய்வூதியர்களினால் காப்புறுதிப் பத்திரங்களைப் பெற விண்ணப்பிக்கையில் மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கான வசதிகள் தேவைப்படுகையில் அவற்றினை நல்லுறவு மற்றும் வினைத்திறன்மிக்க வண்ணம் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதற்காக ஓய்வூதியப் பிரிவினைப் போன்றே பிரதேச செயலகத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள முக்கிய அதிகாரிகளை அறிவூட்டுதல் மற்றும் பொறுப்புக்களைக் கையளித்தல்.

இச்சுற்றுநிருபம் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

**இலங்கை பூராவும் பரந்து வாழ்கின்ற அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள சிரேட்ட பிரசைகளின் வாழ்க்கை நிலையினை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்படும் இவ்வேலைத் திட்டத்தினை வெற்றியடையச் செய்வதற்காகத் தங்களது பூரண ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.**

(ஒப்பம்)
எஸ். எஸ். ஹெட்டிஆரச்சி,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:
01. சனாதிபதி செயலாளர்.
02. பிரதமரின் செயலாளர்.
03. அமைச்சரவையின் செயலாளர்.
04. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
05. செயலாளர் - நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு.
06. கணக்காய்வாளர் நாயகம்.

# புஹூமன்

## சிரேஷ்ட பிரஜைகள் காப்புறுதிக்கான பிரேரணைப் படிவம்

ஓய்வூதிய திணைக்களம்

01. ஓய்வூதியம் பெறும் பிரதேச செயலகம்:

________________________________________

02. கிராம சேவகர் பிரிவு:

________________________________________

03. முழுப்பெயர் (தமிழில்):

________________________________________

04. பெயர் (முதலெழுத்துக்களுடன்):

________________________________________

05. ஓய்வூதிய இலக்கம்:

________________________________________

06. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

________________________________________

07. முகவரி:

________________________________________

08. பிறந்த திகதி:

________________________________________

09. ஓய்வூதியக் கொடுப்பனவை பெறும் வங்கியின் / தபால் நிலையத்தின் பெயர்: (கிளையின் பெயரை குறிப்பிடவும்)

________________________________________

________________________________________

10. கணக்கு இலக்கம்:

________________________________________

11. ஓய்வுப்பெற்ற திகதி:

________________________________________

12. தொலைபேசி இலக்கம்:

________________________________________

13. காப்புறுதி திட்டத்துடன் இணைந்துகொள்ளும் திகதி:

________________________________________

14. காப்புறுதி திட்டம்: திட்டம் 1☐ திட்டம் 2☐ திட்டம் 3☐

15. உங்களுக்கு உயிராபத்து நோய்களுக்கான காப்புறுதியை பெற்றுக்கொள்ள வேண்டுமா? ஆம் ☐ இல்லை ☐

16. அனுகூலங்களை பெறுபவரின் பெயரும் தேசிய அடையாள அட்டை இலக்கமும்:

________________________________________

17. நீங்கள்

| | | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| i) | கடும் ஆபத்தான ஏதேனும் விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறீர்களா? | ☐ | ☐ |
| ii) | ஏதேனும் உடல் அல்லது உளரீதியான குறைபாட்டினை கொண்டிருக்கிறீர்களா? | ☐ | ☐ |
| iii) | திடீர் விபத்து அல்லது நோய் காரணமாக அங்கவீனமடைந்திருத்தல் அல்லது நிரந்தரமாக அங்கவீனமடைந்திருத்தல் உண்டா? | ☐ | ☐ |
| iv) | கடந்த மூன்று வருடங்களில் சத்திர சிகிச்சைக்கு உட்பட்டிருத்தல் அல்லது மருத்துவ நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றிருத்தல் அல்லது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருத்தல் உண்டா? | ☐ | ☐ |

மேற்கூறிய ஏதேனும் கேள்விக்கு "ஆம்" என பதிலளித்திருப்பின் விபரங்களை தருக.

________________________________________

________________________________________

2014.07.04 ஓய்வூதியக் கொடுப்பனவு சம்பந்தமாக அரசாங்க சுற்றறிக்கை 08/2014 இற்கமைய அறிமுகப்படுத்தப்பட்ட காப்புறுதியுடன் இத்தால் உடன்படுகின்றேன். இதன்படி எனது மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவிலிருந்து ரு……………. தொகையை அறவிட்டு "ஏஷியன் எலாயன்ஸ்" காப்புறுதி நிறுவனத்திற்கு அனுப்பிவைக்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

______________________________

ஓய்வூதியம் பெறுபவரின் கையொப்பம்

மேற்குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

அலுவலக பாவனைக்கு மட்டும்

______________________________

பெற்றுக்கொள்ளும் அலுவலரின் கையொப்பம்

திகதி: ____ / ____ / 20____

## இத்திட்டத்தை இணைந்து செயற்படுத்துவோர்:

පරපුරක අභිමානය
தலைமுறையொன்றின் பெருமிதம்
Pride of a Generation

ஓய்வூதிய திணைக்களம்

Asian Alliance Insurance
Rest Assured
A Softlogic Group Company